**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OVER AN EXTENT OF 4.50 Ha BY M/S. ARUTSELVI AT S.F. NO. 374/5 (PART 12), ANAIMALLUR VILLAGE, ARCOT TALUK, RANIPET DISTRICT ON 24.02.2021 AT 2.00 P.M. IN M/S. SRI SAKTHI THIRUMANA MANDAPAM, KAVANOOR SALAI, TIMIRI, RANIPET DISTRICT – 632 512.**

**Present:**

**Thiruvalargal:**

1. Thiru. A.R. Gladstone Pushparaj, I.A.S., : District Collector, Ranipet District.

2. Thiru. G. Ravichandran. M.E., : District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore.

**Project Proponent**

1. Mrs. Arutselvi

Public and other Officials : 85 Nos. (List enclosed)

******

**Introduction:-**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore welcomed the District Collector, Ranipet District, Revenue Officials, General Public, Environmentalist and project proponents for the public hearing conducted on 24.02.2021 for the proposed rough stone quarry over an extent of 4.50 ha by M/s. Arutselvi at S.F. no. 374/5 (part 12), Anaimallur Village, Arcot Taluk, Ranipet District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore emphasised that as per the Environment Impact Assessment Notification issued by the Ministry of Environment and Forest dated 14.09.2006 it is necessary to conduct a public hearing for the projects covered in the schedule of the said Notification as specified therein.

Based on that, the proposed rough stone quarry over an extent of 4.50 ha by M/s. Arutselvi at S.F. no. 374/5 (part 12), Anaimallur Village, Arcot Taluk, Ranipet District is covered inthe schedule of the said Notification, it is necessary to conduct the public hearing for the said project.

In this regard, public notice in Tamil and English was published in dailies "Dinamani" and Indian Express" dated 21.01.2021 about the public hearing.

He also said that the project proponent will explain their proposed project and the Environment Impact Assessment study conducted through a PowerPoint presentation. Then, the public can express their views, suggestions, and

comments on the said project. For that, the project proponent will give necessary explanations/ clarification for the queries raised by the public.

He also stated that the views, suggestions, and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority.

**The District Collector, Ranipet District:**

The District Collector, Ranipet District initiated the Public Hearing process for the public gathered for the public hearing for the proposed rough stone quarry over an extent of 4.50 ha by M/s. Arutselvi at S.F. no. 374/5 (part 12), Anaimallur Village, Arcot Taluk, Ranipet District.

He informed that all the answers and explanations given by the project proponents for the questions and queries raised by the public will be recorded and the same will be sent to the State Environment Impact Assessment Authority. Based on this, it was requested to raise questions and queries regarding the proposed Rough stone mining project to be carried out near the village. The project proponentmust explain the project throughapower-point presentation. He requested thepublic to obtain necessary clarification for the doubt.

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore asked the representative of the said Rough Stone Mining Project to explain about their proposed project and study on the Environmental Impact Assessment through a PowerPoint presentation to the public.

**Thiru.N.Varadharajan, Project Advisor, Hubert Enviro Care Systems Private Limited, Chennai:**

He explained the details of the project through a Powerpoint presentation. He started by welcoming the Collector, all the Government officials and, the public. The name of the project proponent Thirumathi S. Arutselvi and it is a proposed Rough stone quarry over an extent of 4.50 ha at S.F.No.374/5 Part - 12,Anaimallur village,Arcot Taluk, Ranipet District. The Mining plan was approved by Assistant Director, Geology & Mining Department, Ranipet on 21.02.2020. The Proposed Production Capacity is 13,238 m3 of Rough Stone and 35,728 m3 of weathered rock. The Geological reserves available are 31, 28,158 m3 of Rough Stone and 48,888 m3 of weathered rock.Topsoil and waste will be dumped inside the mining lease area by providing a 7.5 m buffer area. Fencing will be formed 7.5 to 10 m to avoid the movement of the public and cattle. Centimeter technology blasting proposed.Before and after blasting green and red

flags will be shown. In the place of blasting,centries will be placed to avoid the persons coming inside after blasting only it will be allowed. For the employee's safety and health a check-up will be doneregularly. The groundwater availability will be 65 to 75 m below the Ground level. The proposed rough stone mining will be done 55 m above the ground level and 20 m below the ground level. All the facilities will be provided to the workers. The Vibration will be prevented by wet drilling, blasting will be stopped at high wind speed, and planting more trees on the boundary of the leased area. It is a Government Poramboke land and no habitation within 300m, no rehabilitation and resettlements for the proposed project. The satellite image of the proposed quarrying site of a 300 m radius shows a route map for the transportation of vehicles from the quarrying site. The proposed rough stone quarry is 240 to 295 m above the mean sea level.

The nearest human settlement is Anaimallur 2 km, nambarai – 1.3 km, padi – 1.5 km, and vedarajipuram – 1.8 km. nearest state highway – 129 km, Arcot Railway station at 10 km, Chennai port at 114 km, and Chennai Airport at 58 km.

The District collector requested the consultant to put the correct distance of the Chennai Airport from the proposed Rough stone quarry, which is shown wrongly and the Project Advisor agreed it has been mentioned wrongly will be corrected and informed that the Aerial distance will be 108 km.

Further, Project Advisor continues that the Arcot town is located at 10 km. Reserved forest and protected Forest such as palamadai R.F, Punganur RF, Tiruvalam RF, Kaniyambadi RF, Kilminnal RF,Puttur Estate RF & Pusimalaikuppam RF are located 15 km from the project site. Water bodies such as Kaveri odai, palar River,Ponnai River, Mahandravadi Channel, Kaveripak Main Channel, Naganadi River, Irumbedumaduvu River are located 15 km from the project site. No Archaeological important area within 15km. No National park and wildlife sanctuaries within 15 km. Seismic zone of the zone –III. No Interstate boundary within a15 km radius. Topo sketch of 10 km radius showing the location of densely populated, road, agriculture land, and water bodies prepared by Survey of India in that map the proposed project is shown. Drilling, breaking, digging machinery are used for quarrying of Rough stone &weathered rock and loaded in the tipper lorry and sent to the customer. 5m length and 5m width bench will be formed. Weathered rock will be removed first after that jag hammer drilling, blasting and, digging machinery will be used removed and sent to crusher/customer.

Land use details of the quarry area are Area under quarrying pits – 3.34.08 Ha, infrastructure – 0.01.00 ha, roads- 0.02 ha, Green belt development -0.48.35 ha, and unutilized area – 0.64.57 ha. Water requirement for drinking and domestic purpose – 1.9 kLD, Dust suppression – 1.5 kLD, and for Green belt – 2

klD. Totally per day 5.4 kLD. 5,950 litres of HSD will be used for the weathered rock and 10, 40,190 litres for Rough stone for 5 years will be procured from nearby bunkers. Compressor – 1 No, Jackhammer– 6 no's, Tipper lorry 6 Nos will be used.Manpower of 40 no's of highly skilled, skilled, semi-skilled, and unskilled works will be used. Organic waste generation of 10.8 kg/day will be disposed of through the municipal bin and inorganic waste of 10.8 kg/day will be disposed of through TNPCB authorized recyclers. Hazardous Waste of category 5.1 waste oil 3000 L/year will be disposed of through TNPCB Authorized agencies.

Environment Management Plan was prepared based on Air, Noise, Water, Land, and vibration. To prevent impact on the Air for the Operation of the quarry, drilling, blasting, digging, vehicle movement following measures are proposed water sprinkling, wet drilling, providing mask, helmet and gloves to the operators, vehicles will be covered by Tharpail. To prevent impact on Noise during blasting, a low quantity of blasting material will be used for explosion and regular checking of Noise level and development of green belt around the haul road. Sewage water generation will be 1.7 kLD will be disposed of through a septic tank and soak pit. Water sprinkle will be done to prevent dust emission. Control basting methodology is proposed to minimize the fly rock and vibration. A Tree of 200 Nos will be planted. Under Corporate Environment Responsibility Rs. 1, 98,085/-are proposed for Government Higher Secondary School, Timiri for sanitation facility, drinking water facility. The quarrying activities in this area will benefit the local people 40 Nos. and indirect employment to 75 people.The total capital investment on the project is Rs. 4, 62, 30,000/-.

The District collector request the details of the salary of the 40 people were not furnished and the Consultant informed the detailed break-up is available in the mining plan approval.

**The District Collector, Ranipet District:**

The District Collector, Ranipet District has requested the public to raise the views one by one after giving the name & address.

**Thiru. Jayaprakash Narayanan, Anaimallur.**

He pointed out the following:

- The present Air Quality was not the same of 20 years back our village people lived along with the Environment earlier.
- The Ground Water in the Anamallur area went down and salty results ina scarcity of drinking water.
- Nodevelopment due to the proposed Rough Stone Quarry in their area.
- The Tipper Lorries going overload withoutthe proper cover of tharpaai.

- In theNewspaper press release, there isa presence of Gold in their area in this regard representation was given to the Tahsildar from village people for proper investigation of the same.
- Due to blasting in the mining results in acrack in walls of the nearby houses

**Thiru. Elumalai, Mohanavaram Village:**

He informed the impact on the blasting in the existing quarries in and around Anaimallur Village is more, developed cracks in the house buildings and creating noise pollution. Abortion occurs in females and animals. Agriculture gets affected. Groundwater went 600 ft. below the ground level. Also, he requested permission may be given after analysing the above fact for the said proposed quarry.

**Thiru. Thirumal, Mohanavaram Village.**

He informed that dust emanating from the quarry is settling on the surrounding plantations and agricultural fields spoil the Agriculture activities. Raw Rice, Coconut, peanuts & Banana production went lower from 100 % to 10%. We use to see Mullampandri, Kazhuthaipuli, Nari, Kullanari, Malaipambu in the hill. Now, it's not present. Earlier, 10,000 Nos Vaval existed in the cave; due to blasting noise, no Vaval was present now. Earlier, hills were seen full of trees, but now no trees are there. Temple near the hills is cracked. In Mohanavaram Village 150 houses were there, each house has 3- Pasumadu, 3- kandrukutti, 10- Aadu. All the animals were grazing in that hills and presently no animals are grazing there.

**Thiru. T.P. Elumalai., from Viduthalai Chiruthaigal Katchi**

He informed that in the night-time in Anaimallur area blasting takes place results in holes in the nearby colony of Kavanoor village. Water management should be maintained properly. Water usage for agriculture for 10 years is used for one day in mining. Groundwater went down resulting in scarcity of water for drinking and now a day not even getting the salty water. The Road from Kavanoor and Timiri cannot be travelled due to dust particlesand request to reduce the vehicle movement. He requested to check 150 to 200 houses in their colony and give necessary compensation for the people.

**Thiru. Padmanabhan, Paadi Village.**

He informed that daily lakh litre of water was taken for the Operation of existing quarries resulting in groundwater depletion and scarcity of water for drinking. The existing stone quarries are the reason for the50 to 60 open wells in their area in dry conditions. Wastewater is disposing in Atthu odai resulting in scarcity of water in Paadi village, Numbarai village, Numbarai colony, and

surrounding area. Agriculture islost and theanimal doesn't have water for drinking. Dust particles are seen spreading like smog. He requested Tamil Nadu Pollution Control Board to inspect theexisting stone quarry to see the air pollution control measures provided, land & water pollution, andtheenvironment polluted. No natural animal present now. He informed that in erullai kuppam 40 family and 50 meters away from their 100 families in Paadi Village.

**Thiru. Nagarajan, Thimiri**

He informed that the dust particular emanating from the tipper Lorries from the road of Thimiri to the rough stone quarry site affects the health of the people living on both the side of the road. Tipper Lorries are moving fast uncontrolled resulting in vehicle accident requests to take action.

**Thiru. Ari Hussain, Thimiri**

He informed that the dust particular emanating from the tipper Lorries from the road of chandrapattu to Thimiri theradi affects the health of the 50 to 60 shops and 100 to 200 houses in the chandrapattu. Tipper Lorries are moving fast uncontrolled resulting in anaccident request to take action.

**Thiru. Narendran, Mohanavaram**

He informed that he is doing Agriculture activities dust is fully covered in their coconut trees resulting in no production of coconut and no water in the Borewell.

**Thiru. Moorthy Janakiraman, Nambarai.**

He informed that Water scarcity last year due to depletion in the groundwater below 600 to 700 ft. resulting in a strike in the BDO office. Dust particles are getting settled in the spinach and spinach not growing. Quarrying waste is dumped as a natural hill and during breezing of air the dust particles spreading. He requested to remove the waste dumped. Water tanker Lorries of 20 no's are going daily to the quarries from their village without permission. In the plan, it was reported by the unit that 5000 litres/day of water is used. But, for one hour they will use 10,000 litres/day.

**Thiru. Sunanda Reddy, Environmentalist.**

He informed that he is the First Environmentalist to support Industries and Environmental safety. He said unemployment is the major issue and by the proposal of the quarry many employment opportunities to local people will be provided. He advised starting quarrying in hectare by hectare and simultaneously plant trees so it will not cause many generation of dust. He also explained that the completed quarries will serve as Water Storage areas. He insisted to plant Fruit-

bearing trees to help the Village. He also suggested the proponent fulfill the CSR Activities based on the demand for the villagers.

**Thiru. Madhu Babu, Hyderabad:**

He said he will give a written suggestion.

**Thiru. B.V.Reddy, Ananthapur**

He supported the proposed project.

**Thiru. Rajesh, Nambarai Village:**

He said 3 people spoken above that permission shall be given to the proposed quarry. We live surrounding the quarry and know the dust and issued due to the quarrying operation and directly affected by the quarrying activities. The permission given for the existing quarry is enough and we don't want any new proposed quarry. he also asked to close the existing quarries.

**Thiru.N.Varadharajan, Project Advisor:**

He informed that due to the existing quarries only problems are arising. Dust generated due to blasting is less when compared to the crushers as said in our report. The Methodology given by us will be followed.

Public: Asked for PH Value and questioned if it was real.

From the presentation, it was shown as a 7.08 to 8.22 pH value from the survey. The public requested to furnish the details of the pH 15 years back. 15 years back report we don't have. The rules of the MoEF&CC that 10 km surrounding the project area 8 surveys should be done and based on that only we have furnished the report.

From the public, it was informed that it is false data. They did not agree with the given PH value.

**Thimiri Villager:**

He said because a minister was visiting their area they constructed a sand road in kavnoor 25 days back, due to which there was a lot of dust generation. He requested the collector to take action regarding the same.

Since no one came forward to express their views/opinion on the project, the District Collector has invited the public to offer their furthermore views if any. Thereafter, there was no further response from the public.

Finally, The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Vellore has narrated the proceedings of the public hearing conducted and concluded the public hearing with a vote of thanks.

A List of the public who attended the Public Hearing along with a recorded video (pen drive) of the entire proceedings, suggestions and written petitions received directly and the response of the project proponent and petitions received through E-mail is enclosed herewith.

**District Environmental Engineer,**
**TNPC Board, Vellore.**

**District Collector,**
**Ranipet.**

**திருமதி. எஸ். அருட்செல்வி கல்குவாரி, சர்வே எண். 374/5 (பகுதி 12), ஆனைமல்லூர் கிராமம், ஆற்காடு தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டத்தில் துவக்க உள்ள கல்குவாரி தொடர்பாக 24.02.2021 பிற்கபல் 2 மணியளவில் தி/ள். ஸ்ரீ சக்தி திருமண மண்டபம், காவனூர் சாலை, திமிரி, இராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்.

திருவாளர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. A.R. கிளாட்சன் புஷ்பராஜ், இ.ஆ.ப. | - | மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>இராணிப்பேட்டை மாவட்டம். |
| 2. | திரு. கு. ர கு. ரவிச்சந்திரன், எம்.இ., | - | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>வேலூர். |
| 3. | நிறுவன உரிமையாளர் | - | திருமதி. அருட்செல்வி |
| 4. | பொது மக்கள் மற்றும் இதர அலுவலர்கள் | - | 85 நபர்கள் (விபரம்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

********

முகவுரை

திருமதி. எஸ். அருட்செல்வி கல்குவாரிக்கு மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை, வருவாய் துறை அதிகாரிகள், பொது மக்கள் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வேலூர் அவர்கள் வரவேற்றார். இது போன்ற திட்டங்களுக்கு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனம் 14.09.2006 அன்று வெளியிட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின்படி பொது மக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

அதனடிப்படையில் இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆனைமல்லூர் கிராமம், க.ச. எண். 374/5 (பகுதி 12)-ல் 4.50 ஹெக்டர் பரப்பளவில் கல் குவாரி துவங்கப்படுவதற்கு பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் தொடர்பாக 21.01.2021 நாளிட்ட தினமணி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இத்திட்டம் துவங்குவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்து நிறுவன பிரதிநிதிகளின் விரிவான விளக்கத்திற்குப் பிறகு பொது மக்கள் கூறும் ஆலைாசனைகள் / கருத்துக்களுக்கு உரிய விளக்கம் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பொது மக்கள் கூறும் ஆலோசனைகள் / கருத்துக்கள் அனைத்தும் காணொளி காட்சியாக பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

**மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை மாவட்டம்.**

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆனைமல்லூர் கிராமம், க.ச. எண். 374/5 (பகுதி 12)-ல் 4.50 ஹெக்டர் பரப்பளவில் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருமதி. எஸ். அருட்செல்வி கல்குவாரி தொடர்பான பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார்.

மேலும், இது தொடர்பாக பொது மக்கள் கூறும் அனைத்து கருத்துக்கள் / ஆலோசனைகளுக்கு நிறுவன உரிமையாளர் மற்றும் பிரதிநிதிகள் அளிக்கும் பதில்கள் காணொளி காட்சியாக பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வேலூர்.**

கல்குவாரி துவங்கப்படுவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை பொது மக்களுக்கு பவர் பாயிண்ட் வாயிலாக விளக்கும்படி கேட்டுக் கொண்டதை தொடர்ந்து ஹூபர்ட் என்விரோ கேர் சிஸ்டம்ஸ் (பி) லிட் ஒருங்கினைப்பாளர் திரு. N. வரதராஜன் பவர் பாயிண்ட் மூலம் பொது மக்களிடம் வளக்கினார்.

**திரு. N. வரதராஜன், திட்ட ஆலோசகர், ஹூபர்ட் என்விரோ கேர் சிஸ்டம்ஸ் (பி) லிட், சென்னை.**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு அலுவலர்களை வரவேற்றார். இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆனைமல்லூர் கிராமம், க.ச. எண். 374/5 (பகுதி 12)-ல் 4.50 ஹெக்டர் பரப்பளவில் துவங்கப்பட உள்ள கல் குவாரி குறித்து கீழ்கண்டவாறு விளக்கினார்.

- துவங்கப்பட உள்ள குவாரியானது கடல் மட்டத்திலிருந்து 240 முதல் 295 மீட்டர் உயரத்தில் அமைய உள்ளது.
- இத்திட்டத்திற்கு உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறையால் 21.02.2020 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- இப்பகுதியின் புவியியல் அமைப்பின் படி 31,28,158 கன மீட்டர் கடின பாறைகளும், 48,888 கன மீட்டர் படிவுப் பாறைகளும் உள்ளதாக அறியப்படுகிறது.
- இதன் மூலம் 13,238 கன மீட்டர் கடின பாறைகளும், 35,728 கன மீட்டர் படிவு பாறைகளும் வெட்டி எடுக்கப்படும்.
- பாறைகளை வெட்டி எடுக்கும் முன் அகற்றப்படும் மண் மற்றும் கழிவுகளை சேமித்து வைக்க குத்தகை இடத்தில் 7.5 சதுர மீட்டர் இடையக பகுதி ஒதுக்கப்படும்.
- பொது மக்கள் மற்றும் கால்நடைகள் குவாரிப் பகுதியை நெருங்காவண்ணம் 7.5 மீட்டர் முதல் 10 மீட்டர் உயரம் வரையிலான தடுப்பு (வேலி) அமைக்கப்படும்.
- பாறைகள் துளையிடப்பட்டு விரிசல் ஏற்படுத்தும் தொழில்நுட்பத்தில் வெடி வைத்து தகர்க்கப்பட உள்ளது. பாறைகளில் வெடி வைக்கும் முன்பும், பிறகும் பச்சை மற்றும் சிவப்பு வண்ண கொடிகள் மூலம் சமிக்ஞை செய்யப்படும்.
- பாறைகள் வெடி வைக்கும் இடத்தில் பொது மக்கள் யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- பணியாளர்கள் அனைவருக்கும் சுகாதாரம் மற்றும் பணி பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.
- அதிர்வுகள் ஏற்படுவதை தடுக்க பாறைகளில் துளையிடும் பொழுது நீர் பயன்படுத்தப்படும். வேகமான காற்று வீசும் பொழுது வெடி வைப்பது தவிர்க்கப்படும்.
- குவாரியை சுற்றிலும் உள்ள குத்தகை இடத்தில் அதிகப்படியான மரங்கள் நடவு செய்யப்படும்.
- குவாரிப் பகுதியானது அரசு புறம்போக்கு பகுதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் 300 மீட்டர் இடைவெளியில் குடியிருப்புக்களோ, மறு குடியமர்த்தப்பட்டவர்களோ இல்லை.
- இப்பகுதியிலிருந்து ஆனைமல்லூர் கிராமம் 2 கி.மீட். தொலைவிலும், நம்பரை கிராமம் 1.3 கி.மீட். தொலைவிலும், பாடி கிராமம் 1.5 கி.மீட். தொலைவிலும், வேதராஜபுரம் 1.8 கி.மீட். தொலைவிலும் அமைந்துள்ளது. மேலும், மாநில நெடுஞ்சாலை 129 கி.மீட். தொலைவிலும், ஆற்காடு இரயில் நிலையம் 10 கி.மீட். தொலைவிலும், சென்னை விமான நிலையம் 108 கி.மீட். தொலைவிலும் அமைந்துள்ளது.

- இத்திட்டப் பகுதியிலிருந்து 15 கி.மீட் தொலைவில் பாலமடை, புங்கனூர், திருவளம், கணியம்பாடி, கீழ் மின்னல், புத்தூர் எஸ்டேட், பூசிமலை குப்பம் போன்ற பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளும், காவேரி ஓடை, பாலாறு, பொன்னையாறு, மகந்தரவாடி கால்வாய், காவேரிப்பாக்கம் கால்வாய், நாகநதி ஆறு, இரும்பெருமடுவு போன்ற நீர் வழித்தடங்களும் அமைந்துள்ளது. மேலும், தொல்பொருள் ஆய்வு பகுதியோ, தேசிய பூங்காவோ அமையவில்லை.
- இப்பகுதி நில நடுக்கம் ஏற்படும் பகுதியாக அறிவிக்கப்படவில்லை.
- 15 கி.மீட் தொலைவில் இரு மாநில எல்லைப்பகுதி எதுவும் அமையவில்லை.
- இயந்திரங்களை பயன்படுத்தி பாறைகளில் துளையிடுதல், உடைத்தல் மற்றும் தோண்டி எடுத்தல் முறையில் 5 மீட்டர் நீள அகல அளவுகளில் வெட்டி எடுக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- இத்திட்டத்தினை செயல்படுத்த 40 நபர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர். இப்பணியில் கம்பரசர் - 1, ஜாக்ஹாம்மர் - 6, டிப்பர் லாரிகள் - 6 பயன்படுத்தப்பட உள்ளது.
- நாளொன்றுக்கு 10.8 கிலோ கரிம கழிவுகள் உள்ளாட்சி அமைப்பின் வாயிலாகவும், 10.8 கிலோ கனிம கழிவுகள் மறுசுழற்சி செய்வதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமும் அகற்றப்பட உள்ளது. நிலம், நீர், காற்று, ஆகியவற்றின் தன்மைக்கேற்ப சுற்றுச்சூழல் மேலாண்மை மேற்கொள்ளப்படும்.
- குவாரி பணியின்போது துளையிடுதல், வெடி பயன்படுத்துதல், தோண்டி எடுத்தல், வாகன இயக்கம் போன்றவற்றால் ஏற்படும் தூசுகளால் பாதிப்பு ஏற்படாவண்ணம் நீர் தெளிப்பான்கள் பயன்படுத்துவதோடு, பணியாளர்களுக்கு தலை கவசம், முக கவசம் பயன்படுத்த அறிவுறுத்தப்படும். பாறை வெடிவைப்பதால் ஏற்படும் ஒலி அளவை கட்டுப்படுத்த குறைந்த அளவு வெடி பொருட்கள் மட்டுமே பயன்படுத்தப்படும்.
- திமிரி அரசு மேல்நிலைப்பள்ளியில் சுகாதார வசதியினை மேம்படுத்தவும், குடிநீர் வசதி ஏற்படுத்தவும் சுற்றுச்சூழல் மேலாண்மையின் கீழ் சுமார் ரூ. 1,98,085/- செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது உள்ளூர் பொது மக்கள் சுமார் 40 நபர்கள் நேரிடையாகவும், சுமார் 75 நபர்கள் மறைமுகமாகவும் பயனடைவார்கள்.
- இத்திட்டமானது சுமார் 4,62,30,000/- ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.
- மாவட்ட ஆட்சித்தலைவர் குறுக்கிட்டு 40 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என கூறிய நிலையில் அவர்களுக்கான சம்பளம் குறித்த விபரம் இல்லை என வினவியபோது, அனைத்தும் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கையில் இடம் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை மாவட்டம்</u>.

பொது மக்கள் ஒவ்வொருவராக தங்கள் கருத்துக்களை கூறுவதற்கு முன் தங்கள் பெயர் மற்றும் விலாசத்தினை தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

<u>திரு. ஜெயபிரகாஷ் நாராயணன், ஆனைமல்லூர்.</u>

- பொது மக்களாகிய நாங்கள் இந்த பகுதியில் 20 ஆண்டுகளுக்கு முன் இருந்த சுற்றுச்சூழல் மற்றும் காற்றின் தரம் தற்போது இல்லை.
- ஆனைமல்லூர் பகுதியில் நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்கு சென்று விட்டதாகவும், குடிநீரில் உப்புத்தன்மை அதிகரித்து விட்டதோடு குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.
- புதிதாக துவங்கப்பட உள்ள கல்குவாரியினால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது.
- கனரக வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட எடையை விட கூடுதலாக ஏற்றிச் செல்வதோடு தார்பாய்கள் பயன்படுத்தாமல் இயக்கப்படுகிறது.

- தங்கள் பகுதியில் தங்கம் இருப்பதாக நாளிதழில் வெளியான செய்தியினை தொடர்ந்து இது குறித்த ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று வட்டாட்சியரிடம் முறையிடப்பட்டுள்ளது.
- குவாரிகளில் வெடி வைப்பதால் அருகிலுள்ள குடியிருப்புகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது என தெரிவித்தார்.

**திரு. ஏழுமலை, மோகனாவரம் கிராமம்**

குவாரிகளில் வெடி வைப்பதால் அதிக பாதிப்பு ஏற்படுவதாகவும், அருகிலுள்ள குடியிருப்புகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், பெண்கள் மற்றும் கால்நடைகளுக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார். நிலத்தடி நீர் 600 அடிக்கும் கீழ் சென்று விட்டதாகவும், விவசாயம் முற்றிலும் பாதிப்படைந்து விட்டதாகவும் தெரிவித்தார். இதனை முழுமையாக ஆராய்ந்த பிறகே கல்குவரரி துவங்க அனுமதி அளிக்கும்படி கேட்டுக்கொண்டார்

**திரு. திருமால், மோகனாவரம் கிராமம்**

அருகிலுள்ள குவாரிகளிலிருந்து வெளிப்படும் தூசிகள் பயிர்கள் மற்றும் விவசாய நிலங்களில் படிவதால் விவசாயம் முற்றிலும் பாதிப்படைந்து விட்டது. வெடி வைப்பதால் கோவில் சேதமடைந்து விட்டதாக கூறினார். இப்பகுதியில் நெல், தென்னை, நிலக்கடலை மற்றும் வாழை ஆகியவற்றின் விளைச்சலானது 10 சதவிகிதமாக குறைந்து விட்டது. தங்கள் பகுதியில் உள்ள மலைகளில் மரங்கள் மற்றும் வன விலங்குகள் அதிக அளவில் இருந்ததாகவும் தற்போது அவை முற்றிலும் அழிந்து விட்டதாகவும் கால்நடைகள் எதையும் வளர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**திரு. T.P. ஏழுமலை, மாவட்ட துணை செயலாளர், விடுதலை சிறுத்தைகள் கட்சி**

ஆனைமல்லூர் பகுதியில் உள்ள குவாரிகளில் இரவு நேரங்களில் வெடி பயன்படுத்துவதால் காவனூர் கிராமத்திற்கு அருகில் உள்ள காலனி குடியிருப்புகள் சேதம் அடைந்துள்ளது. இது தொடர்பாக காலனியில் உள்ள குடியிருப்புகளை ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்கவேண்டும். நிலத்தடி நீர் அதிக ஆழத்திற்கு சென்று விட்டதால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், உப்பத்தண்ணீர் கிடைப்பது கூட சிரமமாக உள்ளதாகவும் கூறினார். விவசாயத்திற்கு 10 ஆண்டுகாலம் பயன்படுத்த போதுமான நீர் குவாரிகளில் ஒரு நாள் பயன்படுத்தப்படுகிறது என்றும் காவனூர் - திமிரி சாலைகளில் அதிக அளவு தூசுகள் ஏற்பட்டு பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த சாலையில் வாகன போக்குவரத்தை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**திரு. பத்மநாபன், பாடி கிராமம்.**

தற்போதுள்ள குவாரிகளில் பல இலட்சம் லிட்டர் தண்ணீர் பயன்படுத்துவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதாகவும் அதனால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், சுமார் 60 கிணறுகள் வற்றிவிட்டது எனவும் தெரிவித்தார். ஓடைப்பகுதியில் கழிவுநீர் வெளியேற்றப்படுவதால் பாடி, நம்பரை, நம்பரை காலனி சுற்றுவட்டார பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, விவசாயம் முற்றிலும் அழிந்து விட்டது, விலங்குகளுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

குவாரிகளிலிருந்து வெளியேறும் தூசுகளால் அப்பகுதி முழுதும் புகை மண்டலமாக காணப்படுகிறது. எனவே, இப்பகுதியில் உள்ள குவாரிகளால் நிறுவப்பட்டுள்ள காற்று மாசு தடுப்பு முறைகளை கண்காணிக்கவும், நிலம், நீர் மற்றும் சுற்றுச்சூழல் மாசு தொடர்பாக தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் உரிய ஆய்வு செய்யப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் குறுக்கிட்டு அப்பகுதியில் எத்தனை குடியிருப்புகள் உள்ளது என கேட்டுக் கொண்டதையடுத்து, இருளர் குப்பத்தில் 40 குடும்பங்களும் 50 மீட்டர் தொலைவில் உள்ள பாடி கிராமத்தில் சுமார் 100 குடும்பங்களும் வசிப்பதாக தெரிவித்தார்.

**திரு. நாகராஜன், திமிரி.**

திமிரியிலிருந்து குவாரிகளுக்கு கனரக வாகனங்கள் அதிகமாக இயக்கப்படுவதால் உண்டாகும் தூசுகளால் சாலையின் இருபுறமும் வசிக்கும் பொது மக்களின் உடல் நிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. அதிவேகத்தில் இயக்கப்படும் வாகனங்களால் விபத்து ஏற்படுவதால் வாகனங்களின் வேகத்தை கண்காணிப்பதோடு வாகனங்களின் இயக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

**திரு. அரி ஹுசைன், திமிரி.**

சந்திரபட்டு – திமிரி தேரடி சாலையில் கனரக வாகனங்கள் அதிவேகத்தில் இயக்கப்படுவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகவும், அருகிலுள்ள கடைகள் மற்றும் குடியிருப்புகள் பாதிப்புக்குள்ளாவதாகவும், அதிவேகத்தில் இயக்கப்படும் வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

**திரு. நரேந்திரன், மோகனாவரம்.**

தனது விளை நிலங்களில் குவாரிகளிலிருந்து வெளியேறும் தூசுகள் படிந்து வருவதால் விவசாயம் செய்ய இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தென்னை விவசாயம் முற்றிலும் பாதிப்படைந்து விட்டதாகவும் தெரிவித்தார்.

**திரு. மூர்த்தி ஜானகிராமன், மோகனாவரம்.**

நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் கடந்த ஆண்டு வட்டார வளர்ச்சி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தூசு படிவதால் இப்பகுதியில் கீரை விவசாயம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. குவாரி கழிவுகள் மலைபோல் குவிக்கப்பட்டுள்ளதால் அதிலிருந்து தூசிகள் வெளியேறி அருகிலுள்ள நிலங்களில் படிந்துள்ளது. எங்களது கிராமத்திலிருந்து குவாரிகளுக்கு தினசரி 20 லாரிகளில் எவ்வித அனுமதியுமின்றி நீர் எடுத்துச் செல்லப்படுகிறது. குவாரியின் திட்ட அறிக்கையில் நாளொன்றுக்கு 5000 லிட் நீர் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், குவாரியில் ஒரு மணி நேரத்தில் 10000 லிட்டர் வரை பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

**திரு. சுனந்தா ரெட்டி, சுற்றுச்சூழல் ஆர்வலர்**

தான் இந்தியாவின் முதல் சுற்றுச்சூழல் ஆர்வலர் என்றும், குவாரி துவங்கப்படுவதை தான் வரவேற்பதாகவும் தெரிவித்தார். வேலை வாய்ப்பின்மை மிக பெரிய சவாலான நிலையில் இத்திட்டத்தினால் உள்ளூர் பொது மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. குவாரிகள் துவக்கப்படுவதை தான் ஆதரிப்பதாகவும் அதிக அளவில் மரம் நடுவதால் காற்று மாசுபடுவது தடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். மூடப்பட்ட குவாரிகளில் சேகரிக்கப்படும் மழை நீரினால் பொது மக்கள் பயனடைவர். பழ மரங்கள் நடுவதால் உள்ளூர் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும். பொது மக்களின் கோரிக்கைகளை சுற்றுச்சூழல் பாதுகாக்கும் பொறுப்புடன் தொழிற்சாலைகள் நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

**திரு. மது பாபு,சுற்றுச்சூழல் ஆர்வலர், ஐதராபாத்.**

இத்திட்டம் தொடர்பான தனது எழுத்து பூர்வமான ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

**திரு. ராஜேஷ், நம்பரை.**

துவங்க உள்ள குவாரிக்கு 3 நபர்கள் ஆதரவளித்தனர். ஆனால் அருகில் வசிக்கும் எங்களுக்குத்தான் இதனால் ஏற்படும் பாதிப்பு குறித்து தெரியும். எனவே, குவாரிகள் இயங்க இதுவரை அனுமதி அளித்தது போதும், இனி குவாரிகள் துவங்க அனுமதியளிக்கக்கூடாது எனவும் தற்போது இயக்கத்தில் உள்ள குவாரிகளை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**திரு. N. வரதராஜன், திட்ட ஆலோசகர்**

தற்போதுள்ள குவாரிகளால் மட்டுமே பாதிப்பு ஏற்படுவதாக தெரிவித்தார். மேலும் கிரஷர்களினால் ஏற்படும் தூசுகளை விட குவாரிகளில் ஏற்படும் தூசுகளின் அளவு குறைவாக இருக்கும். சுற்றுச்சூழல் பாதுகாப்பது தொடர்பாக திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகள் கையாளப்படும் எனவும் தெரிவித்தார்.

**பொது மக்கள்**

அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நீரின் pH அளவு உண்மையானது தானா என கேட்டனர்.

ஆய்வின்படி pH அளவு 7.08 முதல் 8.22 ஆக இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து 15 ஆண்டுகளுக்கு முன் நீரின் pH அளவு குறித்து பொது மக்கள் கேட்டபொழுது தங்களிடம் அது குறித்த விபரம் இல்லை என கூறப்பட்டது.

மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் அமைச்சக சட்டத்தின் படி, துவங்கப்பட உள்ள குவாரியிலிருந்து 10 கி.மீட். சுற்றளவில் சுமார் 8 இடங்களில் ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் விபரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கூறப்பட்ட தகவல் தவறானது எனவும் இதில் தங்களுக்கு உடன்பாடு இல்லை எனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

**திமிரி கிராம மக்கள்**

25 நாட்களுக்கு முன் தங்கள் பகுதிக்கு அமைச்சர் வந்ததால் மணல் கொண்டு அமைக்கப்பட்ட சாலையிலிருந்து தற்போது அதிக அளவிலான தூசிகள் வெளியேறுவதாகவும் இது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

மேற்கொண்டு பொது மக்கள் யாரும் தங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கூற முன்வராததால் கூட்டம் நிறைவு பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

இறுதியாக கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் நன்றி கூறினார்.

பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களின் விபரங்கள், அவர்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்து பூர்வமான கருத்துக்கள் மற்றும் அதற்கு நிறுவனம் சார்பில் அளிக்கப்பட்ட விளக்கங்கள், இணைய வழி பெறப்பட்ட புகார், பதிவு செய்யப்பட்ட காணொளி காட்சி (பென்டிரைவ்) அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமாக வாரியம், வேலூர்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**இராணிப்பேட்டை.**